மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, முப்பதுவெட்டி என்ற கிராமத்தில் 2400 மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பூங்காடு என்ற கிராமத்தில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. புன்னைப் பாடியிலும் கை இறைப்பான்கள் பொருந்தப்பட்டு இருக்கின் றன. குஞ்சிரப்பந்தாங்கல் பகுதியிலும் கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. சர்வந்தாங்கல் பகுதியில் குடி நீர்த் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. லாடவரம் கிராமத்திற்கு நிரந்தர பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் துவக்கப் படவுள்ளன. அத்தித்தாங்கல், கல்லேரி, கரிவேடு, வெம்பேடு, ஆகிய எல்லா இடங்களிலும் கையிறைப்பான்கள் பொருத்தப் பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் உள்ள கே. வேலூர், கீழ்பாடி, பழையனூர், கனியனூர் ஆகிய எல்லா ஊர்களிலும் சரிவர பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஜோலார்பேட்டை பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்.

24—(*வினா எண். 9618) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜோலார்பேட்டை பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் ஜோலார் பேட்டை மற்றும் நாட்றம்பள்ளி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 198.68 இலட்ச மதிப்பீட்டில் தயாரிக்கப் பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனை யில் உள்ளது. வாரியத்தின் ஒப்புதலுக்குப் பின்பு, அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அரசு/ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

(முற்பகல் 10–10)

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்காக நன்றி. குடிநீர் வடிகால் வாரியம் அரசினுடைய அனுமதி யைப் பெற்று கடந்த 22–1–1987 அன்று, குடிநீர்

வடிகால் வாரியத்தினுடைய தலைவர் திரு. உகம்சந்த் அவர்களின் திருக்கரத்தால் 2 இடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் திட்டங்கள் எப்போது செயல்படுத்தப்படும், எப்பொழுது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த அரசு அடிக்கல் நாட்டிய எல்லா திட்டங்களையும் தொடர்ச்சியாக வரைமுறையாக ஒழுங்காகச் செய்து முடிக்கும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான உழவுக் கருவிகள் வழங்கல்.

25—(*வினா எண் 9654) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயக் கிடங்குகளில் விவசாயிகளுக்கு தேவையான உழவுக் கருவிகள் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், பென்னகரம் விவசாயக் கிடங்கில் உழவுக் கருவிகள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1985–86-ம் வருடத்தில் பென்னகரம் விவசாயக் கிடங்கில் 6 எண்கள் ''விதை மற்றும் உரமிடும் கருவிகள்,' விநியோகிக்கப்பட்டுள்ளன.

1986–87-ம் ஆண்டில் அதிக அளவில் விவசாயக் கருவிகளை இக்கிடங்கின் இருப்பில் வைத்து விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் 1985–86 ஆம் ஆண்டில் விதை மற்றும் உரமிடும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டிற்குக் கருவிகள் வழங்க கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இப்படிப்பட்ட விவசாயக் கருவிகள் வழங்குவதில் குறைபாடுகளிருப்பதால் அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. அத்தோடு விதை மற்றும் உரங்கள் கூட அவர்களுக்குத் தகுந்த, நியாயமான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS